**தலைப்பு : 315 – வட மாகாண சபை தொடர்பான**
**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

## 01. தூரநோக்கு, செயற்பணி மற்றும் பிரதான செயற்பாடுகள்

### 1.1 தூரநோக்கு

வட மாகாண மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு முறையான நல்லாளுகையின் ஊடாக நிலைபேறான அபிவிருத்தியுடன் சௌபாக்கியத்தினை அடையும் நோக்கம்.

### 1.2 செயற்பணி

உட்கட்டமைப்பு வசதிகளை புனரமைப்பதன் ஊடாக சேவைகளையும் வசதிகளையும் மீளச்செயற்படுத்தி வாழ்வாதாரத்தினை மீள நிறுவுதல் மற்றும் வடக்கு மாகாண மக்களை இலக்காகக் கொண்டு மனித வள இயலுமையினை அபிவிருத்தி செய்தல்.

### 1.3 பிரதான செயற்பாடுகள்

இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தம் மற்றும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபையின் அதிகாரச்சட்டம் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கடமைகளையும் செயற்பாடுகளையும் நிறைவேற்றுதல்.

## 02. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

வட மாகாண சபைக்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 20,550,777,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 16,415,232,281 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க சேமிப்பு ரூபா 4,135,544,719 ஆக இருந்ததுடன் அது மொத்த தேறிய ஏற்பாட்டில் 20 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தியது. விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புகள் | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டுவருபவை | 14,591,000,000 | 12,642,000,000 | 1,949,000,000 | 13 |
| மூலதனம் | 5,959,777,000 | 3,773,232,281 | 2,186,544,719 | 36 |
| மொத்தம் | 20,550,777,000 | 16,415,232,281 | 4,135,544,719 | 20 |

மத்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் மாகாண சபை நிதியத்தின் கீழ் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் மாகாண சபை நிதியத்தின் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக் கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.